

நெல்லை அரசு பொறியியல் கல்லூரியில் ஆசிரியர்களை கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் 2024–25 ஆம் கல்வியாண்டில் மாவட்டத்தில் 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுதேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ஒளிரும் ஆசிரியர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மேயர் ராமகிருஷ்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (3.1.2026) சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 296வது பிறந்த நாளினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், சூரக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி ஆகியோரும் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர், மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 226வது பிறந்த தினத்தை முன்னிட்டு கப்பலூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், திருமங்கலம் நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.




தேனி வடக்கு மாவட்டம் பி.சி. பட்டி பேரூராட்சி பகுதியில் தனியார் பள்ளியில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி துவக்கி வைத்தார். பி.சி. பட்டி பேரூராட்சி தலைவர் வழக்கறிஞர் மிதுன் சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். துணை தலைவர் மணிமாறன் முன்னிலை வகித்தார். உடன் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் வில்லியம் ஜேசுதாஸ், மாவட்ட சுகாதார அலுவலர் ஜவகர், சுகாதாரஇணை இயக்குனர் கலைச்செல்வன், பேரூராட்சி செயல் அலுவலர் ராஜேஷ், பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் கவுன்சிலர்கள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி நகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் 2.0(2023–2024) கீழ் ரூபாய் 26 லட்சம் மதிப்பீட்டில் 9 வார்டு பகுதியில் கட்டப்பட்ட. புதிய சமுதாய கழிப்பறையை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர்மன்றத் துணைத் தலைவர் குணா, பரமக்குடி வடக்கு நகர் கழக செயலாளர் ஜீவரத்தினம், நகராட்சி நகர்மன்ற உறுப்பினர் கருப்பையா, நெசவாளர் அணி அமைப்பாளர் சந்திரசேகர்,வார்டு செயலாளர் கஜேந்திரன், ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் கோவிந்தராஜ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெயிந்த், கழக நிர்வாகி சிவக்குமார், நாகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர், மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 226வது பிறந்த தினத்தை முன்னிட்டு பெரியார் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அன்னாரது திரு உருவ சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க திராவிட பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்துவது மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து நடைபெற்ற மாவட்ட செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ., எம்.ஆர்.எம். பாலசுப்ரமணியம், சோமசுந்தர பாண்டியன், தனச்செல்வம், மதுரை பாலா, சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன், ரோகிணி பொம்ம தேவன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்



திருப்புவனம் மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர். கிளைக் கழக வட்டக் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் வசந்தி சேங்கைமாறன் தலைமையில் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மேலிட பார்வையாளராக புதுச்சேரி மாநில இளைஞரணி செயலாளர். சட்டமன்ற உறுப்பினர் சம்பத் ஆலோசனை வழங்கி உரையாற்றினார் . இக்கூட்டத்தில் பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், சிவஞானபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் வழங்கினார்.நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், சின்னமாரிமுத்து, இமானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கனிமொழி கருணாநிதி எம்.பி பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரத்தில் ஆதரவற்றோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தி.மு.க. துணை பொது செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு இராமநாதபுரம் திமுக பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மருதுபாண்டி ஏற்பாட்டில் இராமநாதபுரம் அக்ரஹாரம் பகுதியில் உள்ள குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆதரவற்றோர் இல்லத்திற்கு சென்று அங்குள்ள ஆதரவற்றோருக்கு காலை சிற்றுண்டி உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவரும் வடக்கு நகர் செயலாளருமான ஆர்.கே.கார்மேகம் தலைமை வகித்தார் மேலும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தண்டபாணி, இராமநாதபுரம் வடக்கு நகர துணை செயலாளர் சதீஷ்குமார், மாவட்ட அயல அணி துணை அமைப்பாளர் பிரதீப் பழனிவேல், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் கணேசன், வடக்கு நகரத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் வீரக்குமார், வடக்கு நகர் இளைஞரணி துணை அமைப்பாளர் மணிவண்ணன், வடக்கு நகர் அமைப்பு சாரா ஓட்டுனர் துணை அமைப்பாளர் பேச்சிமுத்து, தாமரைக் குளம் கிளைச் செயலாளர் சோமசுந்தரம் மற்றும் ஹரீஸ் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.